RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1127

OPEN ACCESS

# பாரதியார் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

வெ. பரிமளம் [அ, *]

[அ] தமிழ் இலக்கியத்துறை, நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி–642001, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Thoughts in Bharathiyar Poetry

**V. Parimalam [a, *]**

[a] Department of Tamil Language, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi–642001, Tamil Nadu, India

* Corresponding Author: gvelu506@gmail.com

Received: 13-08-2021
Revised: 23-07-2022
Accepted: 30-07-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

Human society is a society where men and women live together. During the barbaric period, women were given more and more equal rights. That society was called the matriarchal society. Women were worshipped as mother goddesses. Women are worshipped as goddesses in literature, and are referred to as the Goddess of Victory and Suli. In Sangam literature, women were poets and knowledgeable enough to act as messengers. But the woman who was worshipped as Adishakthi was suppressed, oppressed, and disenfranchised in mediaeval times. The policy of not teaching women who do cooking was strengthened, and education was denied. There is no difference between men and women except in physical appearance. But they were included in the list of those who needed to be protected. It was Bharathiyar who appeared as the dawn of women's renaissance at that time. He wanted women to be well-dressed and presentable. A woman is naturally very knowledgeable. But some fools spoiled her knowledge. Women should be educated and their knowledge should be expanded. Bharathiyar wanted women to rule and make laws. He said chastity should be common to both men and women. A woman's power lies in her willpower. Society will prosper only if we realise the power of women and treat them as fellow human beings and give them equal rights. Where women are treated with due respect, society thrives.

**Keywords:** Feminism, Shakthi, Bharathiyar, Worship, Willpower

## முன்னுரை

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்ற ஒரு கூட்டமைப்பே சமுதாயமாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் உடல் அமைப்பைத் தவிர வேறு எந்தவிதத்திலும் வேறுபாடுகள் இல்லை. குழந்தை பிறந்து வளரும் காலங்களில் சமூகம் பலவழிகளில் பலகாரணங்களால் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்துகிறது. விளையாடும் விளையாட்டு, பேசும் பேச்சு, உடுத்தும் உடை முதலானவற்றிலிருந்து எல்லாவற்றிலும் பெண்ணுக்கும் ஆணுக்கும் தனித்தனிநியதிகள் பின்பற்றப்படுகின்றன. பெண் என்ற காரணத்தால் பலஉரிமைகள் மறுக்கப்பட்டது. மறுக்கப்படுகிறது. அதை எதிர்த்து பலர் பெண்விடுதலைக்காகப் பாடுபட்டனர். அதில் பாரதியார் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். அவரின் பெண்விடுதலை குறித்த கருத்துக்களே ஆராயப்படுகின்றது.

## பெண்கள்

“மங்கையராய் பிறப்பதற்கு நல்லமாதவம் செய்திட வேண்டும்மா “என்றார் கவிமணி. பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த தாய்வழிச்சமூகம் தான் முதன்முதலில் தோன்றியது.

வேட்டையைத் தொழிலாகக் கொண்ட சமுதாயத்தில் பெண்களின் உழைப்பும் சமமாகத் தேவைப்பட்ட காரணத்தால் பெண்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பெண்கள் சூலி, சூர்மகள், ஆதிசக்தி என்று போற்றப்பட்டனர்.

“இல்லதென் இல்லவன் மாண்பானால் உள்ளதென

இல்லவள் மாணாக்கடை”

என்கிறது திருக்குறள் (Parimelalhagar, 2003). பின்னர் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் ஆண்களின் வலிமை கொண்டாடப்பட்டு ஆண்ணினமே முதன்மையாகக் கருதப்பட்டது. கூட்டமாக வாழ்ந்த சமுதாயத்தில் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றனர். சமஉரிமையுடன் வாழ்ந்த பெண்கள் இடைக்காலத்தில் அடிமைப்படுத்தப்பட்டனர். பெண்கள் அடிமைகள், அடங்கியிருக்க வேண்டியவர்கள், அடுக்களைக்கு உரியவர்கள், கல்விக்கும் கேள்விக்கும் உரியவர்கள் அல்ல என்ற மனப்பான்மை வளர்ந்தது. “அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு” என்று பெண்களுக்கு கல்வியும் மறுக்கப்பட்டது. அச்சமயத்தில் பெண்களின் உரிமைக்காகவும் விடுதலைக்காகவும் பலர்பாடுபட்டனர். அவர்களது பரம்பரையில் நின்று பெண்விடுதலைக்கு குரல்கொடுத்தவர் பாரதியார். பெண்கள் அடிமைகளாக வாழ்வதற்காகச் சமூகம் வகுத்துள்ள நெறிமுறைகளே காரணம் என்று எண்ணிய பாரதி,

“நல்லதோர் வீணைசெய்தே அதை

நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?”

என்று சமூகத்தைச்சாடுகிறார் (Bharathiyar, 2014). மேலும்

“மாதர் தம்மை இழிவு செய்யும்மடமையைக் கொளுத்துவோம்”

என்கிறார் (Bharathiyar, 2014).

பெண் என்பவள் துயர் தீர்க்கப்பிறந்தவள். உயிரைக்காக்கக்கூடியவள். உயிரினுக்கு உயிரானவள். உயிரைவிட இனிதானவள். பெண்களால் வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் முடியும். பெண் என்பவள் சாதமும் படைப்பாள். அதேசமயம் தெய்வச்சாதியையும் படைப்பவள். பெண்களை மாடுகள் போன்று வீட்டில் அடைத்து வைக்கவும் வேண்டாம். பெண்கள் அறிவால் உயர்ந்தவர்கள். ஆகையால் பெண்ணின் அறிவைப் போற்றி வாழவேண்டும் என்றும் பெண்கள் அறிவைவளர்த்தால் இந்த உலகத்தில் உள்ள அறியாமையானது அழியும்.

## பெண்களுக்கு எதிரான கொடுமைகள்

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. அதற்கு எதிரான வலுவான சட்டங்கள் இல்லை. தவறுகளுக்கு தக்க தண்டனையும் கிடைப்பதில்லை. இதை வேடிக்கை மட்டும் பார்ப்பவர்களை,

“மாதரைக் கற்பிழத்து

வன்கண்மை பிறர்செய்ய

பேதைகள் போலுயிரைக் - கிளியே”

பேணயிருந்தாரடீ என்றுக் கூறுகிறார் (Bharathiyar, 2014).

அப்படிப்பட்டவர்களை எதிர்த்துவாழ பெண்களை சிறுவயது முதலேபழக்கவேண்டும். இன்று சிறுவயதிலேயே கொடியவர்களை இனங்காண Good Touch, Bad Touch போன்றவற்றைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கிறோம். ஆனால் அன்றே பாரதியார்

“பாதகஞ் செய்பவரரைக் கண்டால் - நாம்

பயங்கொள்ளலாகாது பாப்பா

மோதி மிதித்து விடு பாப்பா

முகத்தில் உமிழ்ந்து விடுபாப்பா"

என்று அறிவுறுத்துகிறார் (Bharathiyar, 2014).

## பெண் அடிமை

பாரதியின் காலத்தில் பெண்கள் வீட்டிற்குள் முடக்கப்பட்டிருந்தனர். பெண்கள் மென்மையானவர்களாக அடுப்பங்கரைக்கு சொந்தக்காரர்களாக இருந்தனர். இதைக் கண்ட பாரதியார்

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி

பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல

மாதர்அறிவைக்கொடுத்தார்

பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்

பேதைமை அற்றிடும் காணீர்"

என்று பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறார் (Bharathiyar, 2014). பெண் கல்வி கற்றால் தான் குடும்பமும் சமுதாயமும் வளரும்.

பெண்கள் திட்டவட்டமான லட்சியம் கொண்டவர்களாக அறிவில் சிறந்தவர்களாக அறிவுச்செருக்குடையவர்களாக இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். தனது இலட்சியப்பெண்ணை "புதுமைப்பெண்" என்று வர்ணித்தார் (Kalpana, 2020).

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறிகளும்

திமிர்ந்த ஞானச்செருக்கும் இருப்பதால்தான்

செம்மை மாதர் திறம்புவதில்லையாம்"

என்று தன் புதுமைப்பெண்ணைப் பற்றிக் கூறும் பாரதி ஆணும் பெண்ணும் சமம் என்கிறார் (Bharathiyar, 2014). அச்சம், மடம், நாணம் போன்ற குணங்கள் பெண்களை அடிமைப்படுத்துவதாக இருக்கக்கூடாது என்கிறார். பெண் என்பவள் யாருக்கும் அடிமைஇல்லை. தலைநிமிர்ந்து ஒளிரக்கூடிய மிகப்பெரியசக்தி. அவளின் சக்தி அவள் மனவலிமையில் தான் உள்ளது என்பதை "பெண்ணின் வலிமை போல் இப்பாரின்மிசை இல்லையடா" என்றான். மேலும்

"வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா

மானஞ்சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்

கலியழிப்பது பெண்கள் அறமடா?"

என்றான். பெண்கள் அடிமைப்பட்டுக் கிடந்ததைக் கண்ட பாரதி மனதில் உறுதி வேண்டும் என்பதில் "பெண்விடுதலைவேண்டும்" என்று குரல்கொடுக்கிறார் (Bharathiyar, 2014). பெண்ணடிமைத்தனம் நாட்டிற்கே அடிமைத்தனம். பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் சமுதாயம் விடுதலை அடையமுடியாது. பெண்கள் விடுதலைப்போருக்கு முன்னின்ற தன்மையை,

## விடுதலைக்கு மகளிரெல்லாரும்

"வேட்கை கொண்டனம் வெல்லுவோம் என்றே"

என்கிறார் (Bharathiyar, 2014). மேலும் பெண்ணடிமைத்தனத்தில் இருந்து வெளிவராமல் நம்மால் நம்நாட்டுக்கு சுதந்திரம் பெறுவது என்பது நடக்காத ஒன்று என்கிறார்.

## ஆணும் பெண்ணும் சமம்

ஆண்கள் உடல் உழைப்பாலும் பொருளதாரத்தாலும் உயரிய இடத்தில் இருப்பதால் தான் அவர்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. ஆனால் பாரதி பெண் என்பவள் சிவசக்தி. அவளின் மேன்மையான குணத்தைக்காட்டி அவளை அடிமைப்படுத்த வேண்டாம் என்கிறார்." பெண்ணைத்தெய்வம்" என்று போற்றி ஆணும் பெண்ணும் சமம் என்கிறார்.

## பெண் தெய்வம்

உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் தெய்வமாகக் கருதிகின்றவர்கள் ஏன் பெண்ணை மட்டும் தெய்வமாகக் கருதவில்லை. தன்தாயைத் தெய்வம் என்று போற்றும் ஆண்கள் மனைவியை மட்டும் ஏன் அடிமைப்படுத்த நினைக்கவேண்டும் (Kalpana, 2020). பெண்கள் அடிமையுற்றால் மக்கள் அனைவரும் அழிவர். ஆண்கள் கற்புநெறி தவறும்போது பெண்மையே பழிஎய்தும் என்றும் ஆணின் தவறுகளுக்காகப் பெண்கள் சிலுவைசுமக்கும் அவலநிலையைக் கூறி தன் புதிய ஆத்திசூடியில் தையலை உயர்வு செய் என்கிறார் (Bharathiyar, 2014).

## பாஞ்சாலி சபதம்

பெண்ணடிமைத்தனத்தின் கோரத்தை வெளிப்படுத்தும் சிறந்தபடைப்பாக பாஞ்சாலிசபதம் அமைகிறது. அடிமைப்பட்டுக் கிடந்த பாரதநாட்டையும் அதில் வாழ்கின்ற பெண்களையும் பாஞ்சாலிசபதத்தில் உருவகித்துள்ள பாரதி பேச்சு, கருத்து, சுதந்திரம் இல்லாத காலகட்டத்தில் வாழ்ந்த பெண்களின் ஒட்டுமொத்தக் குரலாக பாஞ்சாலியை சபையில் பேசவைக்கிறார். பாஞ்சாலிசபதம் பெண்ணடிமைத்தனத்தை தகர்த்தெறிய அவர்செய்யும் மாபெரும் முயற்சி எனலாம். பாஞ்சாலியின் குரல் புதுமைப்பெண்ணின் குரலாக ஒலிக்கிறது.

"என்னை முதல் வைத்திழந்த பின்பு தன்னை என்மன்னர் இழந்தாரா?

மாறித்தமைத் தோற்ற பின்னரெனைத் தோற்றாரா" என்று

கேள்வி எழுப்புகிறாள் (Bharathiyar, 2014). பாஞ்சாலி சபையில் முதலில் குரல் கொடுக்கவில்லை. ஆண்கள் தன்னைக் காப்பாற்றமாட்டார்களா என்று யாசிக்கிறாள். பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள் என்று சாடுகிறாள். சபையில் அவளுக்கு உதவ ஆண்கள் யாரும் முன்வராத காரணத்தால்

"இது பொறுப்பதில்லை - தம்பி

எரிதழல் கொண்டுவா

கதிரை வைத்திழந்தான் - அண்ணன்

கையை எரித்திடுவோம்"

என்று வீமனின் குரலாகப் பதிவுசெய்கிறார் (Bharathiyar, 2014). இரண்டாவது குரலாக விகர்ணனின் குரல் ஒலிக்கிறது. இறுதியில் பாஞ்சாலி செய்த சபதம் ஒட்டுமொத்த பெண்களின் அடிமைத்தனத்தை மீட்கும் சபதமாக ஒட்டு மொத்த பெண்களின் அடிமைத்தனத்தை எதிர்க்கின்றவர்களின் குரலாகவே இதை எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு சமூகம் மாட்சியும் உயர்ச்சியும் பெறவேண்டுமானால் நிச்சயமாக பெண்களின் பங்களிப்பு அளப்பரிதாக இருக்கவேண்டும். பெண்களின் உரிமைகள் உரிமைகளாக மதிக்கப்படும் போதுதான் சமூகம் மிளிரும்.

“போற்றி போற்றி பேராயிரம் போற்றிநின்

பொன்னடிக்கு பல்லாயிரம் போற்றி”

என்று கூறி பெண்உரிமையுடன் வாழவேண்டும் என்கிறார் (Bharathiyar, 2014)

பாரதியார் கூறிய பெண்உரிமையை பெண்கள் முழுமையாக அடைந்து விட்டார்களா என்று கேட்டால் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. 33 சதவீத இடஒதுக்கீடு இருந்தாலும் முழுமையான சுதந்திரத்தை 50 விழுக்காடு பெண்கள் எய்தவில்லை என்பதே நிதர்சனம். பெண்கள் பெண்ணுரிமை என்பது தவறாக புரிந்து கொண்டு செயல்படுகின்றனர்.

## முடிவுரை

பெண்கள் சம உரிமை பெற்றிருந்த காலகட்டம் மாறி அடிமைத்தனம் மெதுவாக புகுத்தப்பட்டது. கல்விபோன்ற உரிமைகள் மறுக்கப்பட்டு பெண்கள் அடிமைகள் என்ற போக்கு உருவானது. ஆனால் அதை எதிர்த்த பாரதியார் பெண்கள் அடிமைத் தனத்தைப் போக்குவதற்காக குரல் கொடுத்தார். அவரின் கருத்துக்கள் யாவும் பெண்கள் உயர்வுடைய வேண்டும் என்ற மனப்போக்குடன் எழுதப்பட்டது. முதலில் அவரும் பெண்ணுக்கான உரிமையைக் கொடுக்க முன்வரவில்லை. ஆனால் பிறகு பலவிதங்களில் பெண்ணுரிமைக்கான குரலைப் பலஇடங்களில் வெளிப்படுத்துகிறார். பெண் உயர்வு என்பது அவளின் தனிப்பட்ட உயர்வு மட்டுமல்ல ஒட்டு மொத்த சமுதாயத்தின் உயர்வாக அமையும் என்னும் கருத்தாக்கத்தின் வெளிப்பாடே பெண்மை வெல்கவென்று கூத்திடுவோம் என்பதாகும்.

## References


Bharathiyar, (2014) Bharathiar Kavithagal, New Century Book House, Chennai, India.

Kalpana, B., (2020) Bharathi’s Concept of Women Liberation: Legacy and Novelty, Tamil Aivu Kalanjiyam, Coimbatore, India. https://doi.org/10.34256/tak20201

Parimelalhagar, (2003) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License